**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.100/2023
Sessions)

(Prosecution P.W.1 – ஆசைத்தம்பி, த/பெ. ஏமராஜன்
Deposition of witness for (Defence
(Court

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் எனது மகன் 10ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தார். அப்போது அவனுக்கு வயது 14. 14 வயது பையன் மோட்டார் வாகனச் சட்டப்படி இருசக்கர வாகனம் ஓட்டக்கூடாது என்றால் சரிதான். எங்களுக்குத் தெரியாமல் வண்டியை எடுத்துவிட்டான். அதனால் இந்த விபத்திற்கு காரணம் என் மகன் தான் என்று சொன்னால் சரியல்ல. புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் என் மகனுக்கு 14 வயது என்றும், அவன் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வண்டியை ஓட்டிவிட்டான் என்றும் சொல்லவில்லை. என் மகன் தான் இந்த விபத்திற்கு காரணம் என்பதால் புகாரில் இது பற்றி சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்துக் குறித்து 12.00 மணிக்கு ஆதித்தன் என்பவர் போன் மூலமாக தகவல் தெரிவித்தார். உடனே, சம்பவ இடத்திற்கு சென்று போக்கு ஆட்டோவில் ஏற்றி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். ஆதித்தன் எனக்கு விபத்து குறித்து போன் மூலமாக சொன்ன போது நான் மங்காபுரத்தில் என் உறவினர் வீட்டில் இருந்தேன். மங்காபுரத்திலிருந்து சம்பவ இடத்திற்கு வருவதற்கு கால் மணிநேரம் ஆகும் என்று சொன்னால் சரியல்ல. 12.00 மணிக்கெல்லாம் அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டோம். விபத்து 12.05 மணிக்கு நடந்துள்ள நிலையில் 12.00 மணிக்கு எனக்கு தகவல் கிடைத்து போனதாக சொல்வது பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்திற்கு நடந்து சென்றாலும் 2 நிமிடத்தில் சென்றுவிடலாம். என் மகன் இறந்தபிறகு கண் தானம் கொடுத்துவிட்டு அதன் பிறகு புகார் கொடுத்தேன். நான் வேண்டுமென்றே காலதாமதாக புகார் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் தான் லாரியை இடது புறமாக முந்தி முன்னால் சென்ற வாகனத்தின் மீது மோதி

விபத்துக்குள்ளாகிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. எனது வண்டியில் பின்பக்கம் மட்டும் தான் சேதமடைந்துள்ளது. எனது வண்டியில் முன்பக்கம் மட்டும் தான் சேதம் ஏற்பட்டது என்றும், பின்பக்கம் சேதம் ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு காரணம் என் மகனின் கவனக்குறைவு தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. விபத்து வழக்கில் நஷ்டஈடு பெறுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 23rd day of January 2026.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN Digitally signed by M VEERANAN Date: 2026.01.23 17:38:35 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**